08.01.2021

அன்புள்ள மாணவ, மாணவிக்கு

**இரண்டாம் வருட இரண்டாம் பருவக் கருத்தரங்கு**
**கலைமாணி (வெளிவாரிப் பொதுப் பட்டப்படிப்பு), 2014 / 2015**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் நடாத்தும் கலைமாணி கற்கை நெறியின் இரண்டாம் வருட முதலாம் பருவ பரீட்சை இரண்டு தடவைகள் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். அத்துடன், இந்த அச்சுறுத்தல் மேலும் தொடர்வதனால் இப்பரீட்சையை தற்பொழுது நடாத்த முடியாமல் இருக்கின்றது. இதன்காரணமாக, இரண்டாம் வருட இரண்டாம் பருவ கருத்தரங்கை ஒன்லைன் (**online**) மூலமாக **'ZOOM'** எனும் செயலி (**App**) ஊடாக நடாத்துவது என தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இக்கருத்தரங்கு முடிந்ததன் பின்னர் முதலாம் பருவ பரீட்சை நடைபெற்று குறிப்பிட்ட கால இடைவெளியின் பின்னர் இரண்டாம் பருவ பரீட்சை நடைபெறும். எனவே, இதற்கான முழு ஒத்துழைப்பினையும் மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

மேற்படி கருத்தரங்கானது 23.01.2021 ஆம் திகதி முதல் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. உங்களது கணனியிலோ அல்லது கையடக்கத் தொலைபேசியிலோ இந்த **'ZOOM'** எனும் செயலியை தரமிறக்கிச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாடத்தின் கருத்தரங்குக்கான ஒன்லைன் இணைப்புக்கள் (link), 2014 / 2015 மாணவர்களுக்கான வட்ஸ்அப் குழுமத்தில் (**WhatsApp Group**) பகிரப்படும். நீங்கள் இந்தக்குழுமத்தில் இதுவரை இணையவில்லையாயின் திரு. எம்.எம். அப்துர்ரகுமான் (Coordinator / Training, CEDPL) அவர்களை **0776964632** எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இரண்டாம் வருட இரண்டாம் பருவ மீள்பதிவு மற்றும் பரீட்சை விண்ணப்பப் படிவம் என்பன இரண்டாம் வருட இரண்டாம் பருவ பரீட்சைக்கு முன்னர் மாணவர்களுக்கு அனுப்பப்படும்.

ஆகவே, மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளை நிவர்த்தி செய்து இக்கருத்தரங்குகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

**Assistant Registrar / Centre for External Degrees and Professional Learning**
***for* Registrar**